## விழுப்புரம் மாவட்டக் கருவூல அலுவலரின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திருமதி.என். சித்ரா,

செ.மு.ந.க.எண்.2066/2019/ஆ2 நாள்: .03.2020

பொருள் : பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் - கருவூலக் கணக்குத் துறை, விழுப்புரம் மாவட்டக் கருவூல அலகு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணி தொகுதி IV அடங்கிய பணிகள்-2015-2016, 2016-17 மற்றும் 2017-18-ன் மூலம் இளநிலை உதிவயாளராக பணியேற்பு செய்த திருமதி.A.கலைச்செல்வி, அவர்களது பணி வரன்முறைப்படுத்துதல்-ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை :

1) செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை - 3 அவர்களின் கடித எண். 1149/PSD-H2/2019 நாள் 18.02.2019
2) முதன்மை செயலர் / ஆணையர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை - 35 அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.7107/2019/C3 நாள் 04.03.2019
3) கருவூல அலுவலர், விழுப்புரம் செ. மு. ந. க. எண்.2066/2019/ ஆ2 நாள் 08.03.2019
4) அரசு ஆணை நிலை எண்.246 நிதி (க.க.2)த் துறை நாள் 20.09.2011

******

**ஆணை:**

பார்வை 2-இல் காணும் கடிதத்தின் வாயிலாக முதன்மை செயலர் / ஆணையர், கருவூலக் கணக்குத் துறை அவர்களின் செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப் பணி தொகுதி IV - 2015-2016, 2016-17 மற்றும் 2017-18 தேர்வின் மூலம் நேரடியாக இளநிலை உதவியாளராக தேர்வு செய்ததை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் கருவூல அலுவலர், விழுப்புரம் அவர்களின் பணியேற்பு ஆணை வாயிலாக திருமதி.A.கலைச்செல்வி, இளநிலை உதவியாளராக விழுப்புரம் மாவட்டக் கருவூலத்தில் 08.03.2019 முற்பகல் பணியேற்பு செய்துள்ளார்.

2. திருமதி.A.கலைச்செல்வி, இளநிலை உதவியாளர் அவர்களது பணியினை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளின் பொது விதி 23(அ)(1)ன் கீழ் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தனியர் நேரடி இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்துள்ள 08.03.2019 முற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

....2.....

....2.....

1666690

I. இப்பணிவரன்முறையானது சென்னை உயர்நீதி மன்றம் / சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக் கிளை ஆகியவற்றில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப் பணி தொகுதி IV - 2015-2016, 2016-17 மற்றும் 2017-18-ன் தெரிவு சம்பந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

II. திருமதி.A.கலைச்செல்வி, இளநிலை உதவியாளர் அவர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு கால தொடர்பணியில் இரண்டு ஆண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவகாலமாக வைக்கப்படுகிறார்

III. தனியர் அளித்துள்ள சான்றுகளில் ஏதேனும் தவறானவை என பின்னர் தெரியவந்தால் முன்னறிவிப்பின்றி பணி வரன்முறை இரத்து செய்யப்பட்டு உரிய நிர்வாக ரீதியிலான நடவடிக்கை தொடரப்படும் என தெரிவிக்கலாகிறது.

கருவூல அலுவலர்
விழுப்புரம்

இணைப்பு - பணிப்பதிவேடு மற்றும் பதிவுறுத்தாள்

பெறுநர்
திருமதி.A.கலைச்செல்வி,
இளநிலை உதவியாளர்,
மாவட்டக் கருவூலம்,
விழுப்புரம

நகல் - பணியாளரின் பணிப்பதிவேட்டிற்கு

நகல் - இருப்புக் கோப்பு

1666692